**செப்டம்பர் – 15**

# TNPSC துளிகள்

- ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய நீர்மின் நிலையமான கிராண்ட் எத்தியோப்பியன் ரினயசன்ஸ் அணையை எத்தியோப்பியா அரசு அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தது என்ற நிலையில் இது அதன் முழு கொள்ளளவான 5,150 மெகாவாட் திறனை எட்டியது.
- எம்மி விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர் கல்யாண் வர்மா இயக்கிய வைல்ட் தமிழ்நாடு படத்தின் முன்னோட்ட விளம்பரத்தினை (டிரெய்லர்) தமிழ்நாடு வனத்துறை வெளியிட்டது.
- நேபாள ஜனாதிபதி இராம் சந்திர பௌடல், முன்னாள் தலைமை நீதிபதி சுஷிலா கார்க்கியை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று நாட்டின் முதல் பெண் பிரதமராக நியமித்தார்.
- சர்வதேச கிரிக்கெட் சபை (ICC) 2025 ஆம் ஆண்டு ICC மகளிர் கிரிக்கெட் உலக கோப்பைப் போட்டிக்கு முன்னதாக 'Will to Win' என்ற பிரச்சாரத் திரைப்படத்தை வெளியிட்டது.
- ஆரக்கிள் நிறுவனத்தின் இணை நிறுவனர் லாரி எலிசன் 2025 ஆம் ஆண்டில் எலோன் மஸ்க்கை முந்தி உலகின் மிகப் பெரிய பணக்காரரானார்.
    - ஒரே நாளில் எலிசனின் நிகர சொத்து மதிப்பில் 101 பில்லியன் டாலர் வருவாயைச் சேர்த்து, அதன் மதிப்பினை 393 பில்லியன் டாலராக உயர்த்திய ஒரு சாதனை அளவிலான வருவாய் ஆனது என்பதோடு அவை ஆரக்கிள் நிறுவனத்தின் பங்குகளை உயர்த்தியது.
- இந்தியக் கடற்படையானது, குருகிராமில் ஆரவல்லி மலைத்தொடரின் பெயரிடப்பட்ட ஐஎன்எஸ் ஆரவல்லி கப்பலை படையில் இணைத்தது.
    - இந்தக் கப்பல் ஆனது கடற்படையின் தகவல் மற்றும் தகவல்தொடர்பு உள் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 09 ஆம் தேதியன்று, மின்சார வாகனங்கள் (EV) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், நிலையான போக்குவரத்தை நோக்கிய உலகளாவிய மாற்றத்தை விரைவுபடுத்துவதற்காகவும் உலக EV தினம் அனுசரிக்கப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## அணு கனிமச் சுரங்கம்

- அணு கனிமச் சுரங்கத்தைப் பொது ஆலோசனையிலிருந்து விலக்கு அளிக்கும் மத்திய அரசின் அறிவிப்பை தமிழ்நாடு அரசு எதிர்த்தது.
- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தினால் வெளியிடப் பட்ட அலுவலகக் குறிப்பாணையை திரும்பப் பெறுமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசினை வலியுறுத்தியது.
- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 ஆம் தேதியிட்ட குறிப்பாணை, அணு, முக்கியமான மற்றும் மூலோபாய கனிமங்கள் தொடர்பான திட்டங்களைப் பொது ஆலோசனையில் இருந்து விலக்குகிறது.
- நிர்வாக உத்தரவுகள் மூலம் சட்டத்தைத் திருத்துவதற்கு எதிராக அலெம்பிக்

பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் மற்றும் ரோஹித் பிரஜாபதி இடையிலான வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் 2020 ஆம் ஆண்டு தீர்ப்பு உள்ளிட்ட கடந்த கால சட்ட முன்னுதாரணங்களை தமிழ்நாடு அரசு மேற்கோள் காட்டியது.

All mining projects of atomic minerals notified in Part B and critical and strategic minerals notified in Part D of the First Schedule of the Mines and Minerals (Development and Regulation) Act have been exempted from the requirement of public consultation.

The coastal districts of Tamil Nadu are endowed with deposits of Rare Earth Elements embedded in beach sand systems. These coasts are ecologically fragile and highly vulnerable.


Mining in such regions is therefore inherently eco-sensitive and demands rigorous scrutiny with the fullest involvement of local communities.

Exempting projects from public consultation would deprive local communities of their right to raise legitimate concerns.

Policy changes of such significance must be deliberated transparently in Parliament and State Legislatures, with due consultation of the States and the public.

I urge the Union Government to withdraw the Office Memorandum dated 08.09.2025 forthwith.

## சிகூர் யானை வழித்தடம்




- உச்ச நீதிமன்றத்தினால் அமைக்கப்பட்ட சிகூர் பீடபூமி யானை வழித்தட விசாரணைக் குழுவின் பெரும்பாலான கண்டுபிடிப்புகளை சென்னை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது.
- யானைகளுக்கு இடையூறு விளைவிக்காமல் அல்லது செயற்கைத் தடைகளைப் பயன்படுத்தாமல், சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் நிலத்தைப் பேணி பயிரிடுவதற்கு தனியார் நில உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.
- தனியார் சொத்துக்களை தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற குழுவின் பரிந்துரையை அது ரத்து செய்தது.

- உத்தரவுப் பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் இந்த வழித் தடத்திற்கான நிலம் கையகப்படுத்துதலைத் தொடங்க வேண்டும் என்று இந்த அமர்வு உத்தரவிட்டது.
- 1991 ஆம் ஆண்டு தனியார் வன அறிவிப்புக்குப் பிறகு, விதிக்கப்பட்ட நில கொள்முதல் கட்டுப்பாடுகளின் செல்லுபடித் தன்மையினை எதிர்த்து உல்லாச விடுதி உரிமையாளர்கள் வழக்குத் தொடுத்தனர்.
- 1991 ஆம் ஆண்டு அறிவிப்பு மற்றும் 2010 ஆம் ஆண்டு வழித்தட அறிவிப்பு தொடர்பாக முதுமலை விருந்தோம்பல் சங்கம் தொடர்ந்து சட்டச் சவால்களை எதிர்கொண்டு உள்ளதாக நீதிமன்றம் குறிப்பிட்டது.

# தேசியச் செய்திகள்

## ஒருங்கிணைந்த தளபதிகள் மாநாடு 2025




- செப்டம்பர் 15 முதல் 17 ஆம் தேதி வரை மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் 16வது ஒருங்கிணைந்த தளபதிகள் மாநாட்டினை (2025) பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "Year of Reforms – Transforming for the Future" என்பதாகும்.
- இந்த மாநாடு ஆயுதப் படைகளின் சீர்திருத்தங்கள், மாற்றம், செயல்பாட்டுத் தயார் நிலை மற்றும் தொழில்நுட்ப நவீனமயமாக்கல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

## ஆதி சமஸ்கிருதம்

- பழங்குடியின விவகார அமைச்சகம் ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதியன்று ஆதி சமஸ்கிருத டிஜிட்டல் கற்றல் தளத்தின் பீட்டா வடிவினை அறிமுகப் படுத்தியது.
- ஆதி சமஸ்கிருதம் ஆனது பழங்குடியினரின் கலை வடிவங்களைப் பாதுகாத்தல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் உலகளவில் பழங்குடியின சமூகங்களை இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் தளமானது பழங்குடியினக் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட உலகின் முதல் டிஜிட்டல் பல்கலைக்கழகம் என்று விவரிக்கப் படுகிறது.
- ஆதி சமஸ்கிருதம் ஆதி விஸ்வ வித்யாலயா, ஆதி சம்பதா மற்றும் ஆதி ஹாத் எனப்படும் மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது.
- ஆதி விஸ்வ வித்யாலயா பழங்குடியினர் நடனம், ஓவியம், இசை, கைவினைப் பொருட்கள் மற்றும் நாட்டுப்புறவியல் ஆகியவற்றில் 45 உள்ளார்ந்தப் படிப்புகளை வழங்குகிறது.
- ஆதி சம்பதா என்பது பழங்குடியினரின் கலை, ஜவுளி, கலைப் பொருட்கள் மற்றும் கலாச்சாரத்தை உள்ளடக்கிய 5,000 க்கும் மேற்பட்ட தொகுக்கப்பட்ட ஆவணங்களைக் கொண்ட ஒரு டிஜிட்டல் களஞ்சியமாகும்.
- ஆதி ஹாத் என்பது பழங்குடியினரின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கூட்டமைப்பு (TRIFED) உடன் இணைக்கப்பட்ட ஒரு இணைய வணிக தளமாகும்.
- இந்த முன்னெடுப்பு ஆனது 15 மாநிலங்களில் உள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் (TRI) இணைந்து உருவாக்கப்படுகிறது.




## 2026 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் புவியிடக் குறியிடல்

- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல்-செப்டம்பர் மாதங்களில் நடத்தப்பட திட்டமிடப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமான வீட்டுப் பட்டியலிடல் நடவடிக்கைகளின் (HLO) போது புவியிடக் குறியிடல் நடத்தப்படும்.
- கணக்கெடுப்பாளர்கள் திறன் பேசிகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு கட்டிடத்தின் சரியான அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஆயத் தொலைவுகளைப் புவியியல் தகவல் அமைப்பு (GIS) வரைபடத்தில் குறிப்பார்கள்.

- ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஒரு தனித்துவமான புவிசார் குறியீடு ஒதுக்கப்படும், இது டிஜிட்டல் வரைபடங்களில் துல்லியமான இருப்பிட அடையாளத்தை வழங்கும்.
- வீடுகள் கணக்கெடுப்பு மற்றும் வீடுகள் பற்றிய தரவுகள் சேகரிக்கப்படுவதுடன், கட்டிடங்கள் ஆனது குடியிருப்பு, குடியிருப்பு சாராதது, பகுதியளவிலான குடியிருப்புப் பகுதி அல்லது முக்கிய அடையாளப் பகுதியாக வகைப்படுத்தப்படும்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பில் நாடு தழுவிய அளவில் புவியிடக் குறியிடல் பயன்படுத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்; முந்தைய நடவடிக்கைகள் வீடுகளின் பட்டியலிடலுக்காக நேரடியாக வரையப்பட்ட வரைபடங்களை சார்ந்திருந்தன.
- கடைசியாக மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பில் (2011) 330.84 மில்லியன் வீடுகள் பதிவு செய்யப்பட்டன, அவற்றில் 306.16 மில்லியன் வீடுகள் ஆக்கிரமிக்கப் பட்டிருந்தன.




## குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் சட்டம், 2025-இன் விதிகள்





- மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) சமீபத்தில் இந்தச் சட்டத்தின் விதிகள், உத்தரவு மற்றும் விலக்கு உத்தரவை அறிவித்தது.
- இது குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் சட்டம், 2025 என்பதைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தது.

- வெளிநாட்டினர் மற்றும் குடியேற்றம் தொடர்பான அனைத்து விஷயங்களையும் ஒழுங்குபடுத்துவதற்காக நாடாளுமன்றம் ஏப்ரல் மாதத்தில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியது.
- இது பாஸ்போர்ட் (இந்தியாவிற்குள் நுழைதல்) சட்டம், 1920, வெளிநாட்டினர் பதிவுச் சட்டம், 1939, வெளிநாட்டினர் சட்டம், 1946 மற்றும் குடியேற்ற (கொண்டு வருபவர்களின் பொறுப்பு) சட்டம், 2000 போன்ற பல சட்டங்களை ரத்து செய்து மாற்றியது.
- முதல் முறையாக, இவ்விதிகள் குடியேற்றப் பணியகத்தை (BOI) "குடியேற்ற மோசடி வழக்குகளை விசாரிக்க" சட்டப்பூர்வமாக நியமிக்கின்றன மற்றும் வெளிநாட்டினரை அடையாளம் காண, நாடு கடத்த அல்லது அவர்களது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், குடியேற்றத் தரவுத் தளத்தை ஒன்றிணைத்துப் பராமரிக்கவும் மாநிலங்களை ஒருங்கிணைக்கின்றன.
- முதலாவதாக, இவ்விதிகள் அனைத்து வெளிநாட்டினரின் பயோமெட்ரிக் தகவல்களையும் பதிவு செய்வதற்கான சட்ட ஏற்பாட்டைச் சேர்க்கின்றன.
- இதுவரை அசாமிற்கு மட்டும் தனித்துவமான வெளிநாட்டினர் தீர்ப்பாயங்களுக்கு (FT), முதல் வகுப்பு நீதித்துறை நீதிபதியின் அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன.
- ஒரு நபர் "வெளிநாட்டவர் அல்ல" என்பதற்கான எந்த ஆதாரத்தையும் சமர்ப்பிக்கத் தவறினால், அவர் தடுப்புக்காவல் அல்லது தடுப்பு மையத்திற்கு அனுப்ப இது வழி வகுக்கிறது.
- முன்னதாக இது நிர்வாக உத்தரவுகள் மூலம் செயல்படுத்தப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு உத்தரவு, 1964 ஆம் ஆண்டு வெளிநாட்டினர் (தீர்ப்பாய) உத்தரவை மாற்றியது.
- தேசியம் மறுக்கப்பட்ட ஒருவர் நேரில் ஆஜராகத் தவறினால், வெளிநாட்டுத் தீர்ப்பாயங்கள் அவருக்கு கைது வாரண்டுகளை பிறப்பிக்க இது அதிகாரம் அளிக்கிறது.
- அசாமில் தற்போது மொத்தம் 100 தனித்துவமான வெளிநாட்டினர் தீர்ப்பாயங்கள் செயல்பாட்டில் உள்ளன.
- உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் 2019 ஆம் ஆண்டு அசாமில் தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) வெளியிடப்பட்ட பிறகு தனித்துவமான வெளிநாட்டினர் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.
- தேசிய குடிமக்கள் பதிவேடு என்பது அசாமிற்கு மட்டுமே தனியாக மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த உத்தரவு நாடு முழுவதும் பொருந்தும் என்றாலும், வெளிநாட்டினர் தீர்ப்பாயங்கள் அசாமில் மட்டுமே செயல்படுகின்றன.
- மற்ற மாநிலங்களில் சட்டவிரோத குடியேறி உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படுகிறார்.
- இந்த உத்தரவு, எல்லைப் பாதுகாப்புப் படைகள் அல்லது கடலோரக் காவல்படை, சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் நுழைய முயற்சிக்கும் குடியேறிகளின் பயோ மெட்ரிக் தகவல்கள் மற்றும் கிடைக்கக் கூடிய மக்கள்தொகை விவரங்களை மத்திய அரசின் நியமிக்கப்பட்ட இணைய தளத்தில் பதிவு செய்த பிறகு, அவர்களைத் திருப்பி அனுப்புவதன் மூலம் அவர்களைத் தடுக்கச் சட்டப் பூர்வமாக அனுமதிக்கிறது.
- வங்காளதேசம் மற்றும் மியான்மர் எல்லைகளில் நிறுத்தப்பட்டுள்ள எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) மற்றும் அசாம் ரைபிள்ஸ் (AR) ஆகியவை உள்துறை அமைச்சகத்தின் நிர்வாக உத்தரவுகள் மூலம் இதைப் பயிற்சி செய்து வந்தன.
- இப்போது, இது சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஈரான் மற்றும் IAEA அணுசக்தி ஒப்பந்தம்

- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்ட அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பாக ஈரானும் ஐக்கிய நாடுகள் சபையும் முரண்பாடுகளைக் கொண்டுள்ளன.
- சர்வதேச அணுசக்தி முகமை (IAEA) ஆனது இந்த ஒப்பந்தம் அனைத்து ஈரானிய அணுசக்தி நிலையங்களுக்கும் அணுகலை வழங்குகிறது என்று கூறியது.
- இருப்பினும், இந்த ஒப்பந்தமானது புஷெர் அணுமின் நிலையத்தைத் தவிர வேறு எந்த நிலையத்திற்கும் ஆய்வாளர் அணுகலை மேற்கொள்வதற்கான உத்தரவாதம் அளிக்கவில்லை என்று ஈரான் கூறியது.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க தாக்குதல்கள் ஈரானின் அணுசக்தி தளங்களை சேதப்படுத்தியதை அடுத்து, ஒத்துழைப்பில் ஏற்பட்ட முறிவைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது.
- ஈரான் நாட்டு அரசு, ஜூலை மாதம் IAEA முகமையுடனான ஒத்துழைப்பை இடை நிறுத்தியதோடு, அந்த நிறுவனம் இரட்டைத் தரப் பாகுப்பாட்டில் இருப்பதாகவும், ஆய்வுகளை தடுத்து நிறுத்துவதாகவும் குற்றம் சாட்டியது.
- சர்வதேசத் தடைகள் மீண்டும் விதிக்கப்பட்டால் அல்லது விரோத நடவடிக்கைகள் ஏற்பட்டால் ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கூடும் என்று தெஹ்ரான் எச்சரித்தது.



# பொருளாதாரச் செய்திகள்

## SPREE-2025 மற்றும் அவகாசத் திட்டம்

- சமூக பாதுகாப்பை வலுப்படுத்தவும் இணக்கத்தை எளிதாக்கவும் ஊழியர்களின் மாநிலக் காப்பீட்டுக் கழகம் (ESIC) SPREE-2025 மற்றும் அவகாசத் திட்டம்-2025 ஆகியவற்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ESIC பரவலை விரிவுபடுத்துதல், தன்னார்வப் பதிவை ஊக்குவித்தல், வழக்காடலைக் குறைத்தல் மற்றும் தொழிலாளர்களுக்கு சலுகைகளை வழங்குவதை மேம்படுத்துதல்

ஆகியவை இதன் நோக்கமாகும்.

- SPREE-2025 (முதலாளிகள் மற்றும் ஊழியர்களின் பதிவை ஊக்குவிப்பதற்கான திட்டம்) 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை செயலில் இருக்கும்.
- SPREE-2025 திட்டத்தின் கீழ், பதிவு செய்யப்படாத முதலாளிகள் மற்றும் ஊழியர்கள் கடந்த கால நிலுவைத் தொகைகளுக்குப் பொறுப்பேற்காமல் ESI தளம், ஷ்ரம் சுவிதா தளம் அல்லது நிறுவன விவகாரத் தளம் வழியாக ESIC கழகத்தில் சேரலாம்.
- அவகாசத் திட்டம்-2025 ஆனது இழப்பீடுகள், வட்டி மற்றும் ESI சட்டப் பரவல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 முதல் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி வரையில் செயல்படும்.
- நிலுவையில் உள்ள வழக்குகளைத் தீர்ப்பதற்கும் சட்ட இணக்கத்தை வலுப்படுத்துவதற்கும் இது முதலாளிகளுக்கு ஒற்றை முறை வாய்ப்பை வழங்குகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் விண்வெளி சாதனை

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) ஆனது 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி விண்வெளி ஆய்வில் ஒன்பது முக்கிய உலக சாதனைகளைப் படைத்துள்ளது.
- எதிர் வரும் ஆண்டுகளில் இந்தியா எட்டு முதல் பத்து உலக சாதனைகளை அடையும் பாதையில் உள்ளது.
- 2014 ஆம் ஆண்டில், செவ்வாய் கிரக சுற்றுக் கல ஏவல் திட்டமானது இந்தியாவை தனது முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரகத்தை அடைந்த முதல் நாடாக மாற்றியது.
- 2017 ஆம் ஆண்டில், துருவ செயற்கைக்கோள் ஏவு வாகனம் (PSLV-C37) அதன் ஒரே பயணத்தில் 104 செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி, உலகளாவிய சாதனையைப் படைத்தது.

- 2019 ஆம் ஆண்டில், சந்திரயான்-2 உலகின் சிறந்த சந்திரச் சுற்றுக் கல ஒளிப்படக் கருவியை சந்திரனுக்குக் கொண்டு சென்றது.
- 2023 ஆம் ஆண்டில், சந்திரயான்-3 இந்தியாவை சந்திரனின் தென் துருவத்திற்கு அருகில் தரையிறங்கிய முதல் நாடாக மாற்றியது.
- 2014 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், கிரையோஜெனிக் (மீக்குளிர் நிலையிலான) நிலை எஞ்சின் மேம்பாட்டில் இந்தியா மூன்று உலகளாவிய சாதனைகளை படைத்தது.
- ஏவு வாகனம் மார்க்-3 (LVM3) அதன் முதல் கிரையோஜெனிக் ஏவுதலை காலத்தை உலகளவில் கணக்கிடும் போது வேகமாக, வெறும் 28 மாதங்களில் அடைந்தது.
- 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி இந்தியா 4,000க்கும் மேற்பட்ட ஏவு வாகனங்களையும் 133 செயற்கைக்கோள்களையும் விண்ணில் ஏவியுள்ளது.
- இஸ்ரோ அதன் நீண்டகால திட்டங்களின் ஒரு பகுதியாக 2040 ஆம் ஆண்டிற்குள் சந்திரனில் ஒரு மனிதனைத் தரையிறக்க இலக்கு நிர்ணயித்துள்ளது.





## 100வது தொழில்நுட்பப் பரிமாற்றம்

- சிறிய செயற்கைக்கோள் ஏவு வாகன (SSLV) தொழில்நுட்பத்தை மாற்றுவதற்காக இஸ்ரோ நிறுவனமானது இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) உடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்த ஒப்பந்தம் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் தேதியன்று பெங்களூருவில் இஸ்ரோ, நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL) மற்றும் INSPACE ஆகியவற்றால் கையெழுத்தானது.
- இது INSPACE மையத்தினால் மேற்கொள்ளப்பட்ட 100வது தொழில்நுட்பப் பரிமாற்ற ஒப்பந்தமாகும் என்பதோடு இது இந்தியாவின் விண்வெளித் துறையில் தொழில்துறை பங்களிப்பில் ஒரு முக்கியப் படிநிலையாகும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இராணுவச் செலவினம் குறித்த ஐ.நா. அறிக்கை




- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 09 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபை The Security We Need: Rebalancing Military Spending for a Sustainable and Peaceful Future என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- உலகளாவிய இராணுவச் செலவினம் 2024 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவாக 2.7 டிரில்லியன் டாலரை எட்டியது, இது 2023 ஆம் ஆண்டு அளவை விட 9% அதிகமாகும்.

- இந்தப் போக்குகள் தொடர்ந்தால் 2035 ஆம் ஆண்டில் இராணுவச் செலவினம் 6.6 டிரில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அதிகரித்து வரும் இராணுவ வரவு செலவுத் திட்டங்கள் ஆனது நிலையான மேம்பாட்டு இலக்குகளிலிருந்து (SDG) வளங்களை உபயோகிக்கின்றன.
- 2022 ஆம் ஆண்டு முதல் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இராணுவச் செலவு 2.2 சதவீதத்திலிருந்து 2.5% ஆக அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மட்டும் 100 க்கும் மேற்பட்ட நாடுகள் இராணுவச் செலவினங்களை அதிகரித்தன.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இராணுவச் செலவினங்களில் 1% அதிகரிப்பு, பொதுச் சுகாதாரச் செலவினங்களை சுமார் சமமான அளவில் குறைக்கிறது.
- இராணுவச் செலவினங்களில் 15% மறு ஒதுக்கீடு செய்வது வளர்ந்து வரும் நாடுகளில் பருவநிலை மாற்றத்திற்கு நிதியளிக்கும்.

# மாநிலச் செய்திகள்

## நகர்ப்புறப் பகுதிகளுக்கான மாநாடு 2025

- கேரள அரசானது, மாநிலத்திற்கான நகர்ப்புறக் கொள்கையை உருவாக்கி இறுதி செய்வதற்காக கொச்சியில் இந்தியாவின் முதல் நகர்ப்புற மாநாட்டினை நடத்தியது.
- கேரள நகர்ப்புறக் கொள்கை ஆணையத்தின் பரிந்துரைகளைப் பற்றி விவாதிக்க இந்த நிகழ்வு ஒரு தளமாக செயல்பட்டது.
- 'Aspiring cities, thriving communities' என்ற கருத்துருவில் இந்த சர்வதேச மாநாடு நடைபெற்றது.
- கேரள நகரங்கள் 'மாபெரும் நகரமாக' விரிவடையும் போது எழும் விரைவான நகரமயமாக்கலின் சவால்கள் மற்றும் சாத்தியக் கூறுகள் குறித்து இந்த மாநாடு விவாதித்தது.



### கேரளாவின் நகர்ப்புறக் கொள்கை மாதிரி




- கேரளா 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கேரள நகர்ப்புறக் கொள்கை ஆணையம் (KUPC) எனப்படும் இந்தியாவின் முதல் மாநில அளவிலான நகர்ப்புறக் கொள்கை அமைப்பை நிறுவியது.
- கேரளாவின் புவியியல், பருவநிலை மற்றும் குடியேற்ற வடிவங்களின் அடிப்படையில் 25 ஆண்டு கால நகர்ப்புற செயல் திட்டத்தினைத் தயாரிக்கும் பணியை KUPC மேற்கொண்டது.
- 2050 ஆம் ஆண்டிற்குள், கேரளாவின் நகர்ப்புற மக்கள் தொகை தேசிய சராசரியை விட மிக அதிகமாக, 80 சதவீதத்தை தாண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- திருச்சூர்-கொச்சி நிதி சார் தொழில்நுட்ப மையமாகவும், திருவனந்தபுரம்-கொல்லம் கல்வி சார் வழித்தடமாகவும் எனப் பொருளாதார மண்டலங்கள் அடையாளம் காணப் பட்டன.
- கோழிக்கோடு இலக்கிய நகரமாகவும், பாலக்காடு மற்றும் காசர்கோடு சீர்மிகு தொழில்துறை வளர்ச்சி மையங்களாகவும் குறிக்கப்பட்டன.
- ஈரநிலங்களை மீட்டெடுப்பது, நீர்வழிகளை மீண்டும் செயல்படுத்துவது மற்றும் நகர்ப்புறத் திட்டமிடலின் கீழ் பாரம்பரியப் பகுதிகளைப் பாதுகாப்பது குறித்து இந்த அறிக்கை அறிவுறுத்தியது..

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### சர்வதேச விண்வெளி மாநாடு 2025

- 2025 ஆம் ஆண்டு சர்வதேச விண்வெளி மாநாடு பெங்களூருவில் நடைபெற்றது.
- இது ISRO, IN-SPACE மற்றும் நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL) ஆகியவற்றின் ஆதரவுடன் இந்திய தொழில்துறை கூட்டமைப்பினால் (CII) ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "Harnessing Space for Global Progress: Innovation, Policy, and Growth" என்பதாகும்.
- ஏற்றுமதிகள் 11 பில்லியன் அமெரிக்க டாலர் பங்களிப்பதுடன், சுமார் 8.4 பில்லியன்

அமெரிக்க டாலர் மதிப்புடையதாக இருந்த இந்தியாவின் விண்வெளித் துறை, மேலும் 2033 ஆம் ஆண்டிற்குள் சுமார் 44 பில்லியன் அமெரிக்க டாலர்களாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- சமீபத்தில் இந்தியாவில் சுமார் 200 தனியார் விண்வெளி சார் புத்தொழில் நிறுவனங்கள் உருவாகியுள்ளன.
- இந்த மாநாட்டில் டென்மார்க் விருந்தினர் நாடாக இருந்தது.




## COLP48

- பெருங்கடல் சட்டம் மற்றும் கொள்கை குறித்த 48வது வருடாந்திர மாநாடு (COLP48) ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- "Developing World Approaches to Ocean Governance: Perspectives from the Indian Ocean Rim" என்ற கருத்துருவின் கீழ் இந்த மாநாடு நடைபெற்றது.
- சுமார் 50 ஆண்டுகளில் இந்தியா COLP மாநாட்டினை நடத்தியது இதுவே முதல் முறை ஆகும் என்பதோடு இது உலகளாவிய கடல் நிர்வாகத்தில் இந்தியாவின் பங்கில் ஒரு மைல்கல்லினைக் குறிக்கிறது.
- நிலையான மீன்வளத் துறை, பிராந்திய ஒத்துழைப்பு, பாரம்பரிய அறிவை நவீன அறிவியலுடன் இணைத்தல், பருவநிலை நெகிழ்திறன் மற்றும் கடல் ஆராய்ச்சி மற்றும் நிர்வாகத்திற்கான புத்தாக்க நிதி ஆகியவை முன்னுரிமை செலுத்தப்படும் ஐந்து பகுதிகள் ஆகும்.



# முக்கிய தினங்கள்

## கல்வியை தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் 2025 - செப்டம்பர் 09

- மோதல் மற்றும் நெருக்கடி மண்டலங்களில் பள்ளிகள், மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களைப் பாதுகாப்பதற்கான அவசரத் தேவையை இது மிக நன்கு எடுத்துக் காட்டுகிறது.
- இந்த நாள் கத்தார் அரசின் தலைமையில் 2020 ஆம் ஆண்டில் 62 நாடுகளால் இணைந்து அனுசரிக்கப்பட்டது.
- 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், மாணவர்கள், கல்வியாளர்கள், பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் மீது சுமார் 6,000 தாக்குதல்கள் நடந்து உள்ளன.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: 'Challenging narratives, reshaping action' என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★